
# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 JUNE

மலர்: 11 இதழ்: 9 ஜூன் 2018 விலை: ரூ. 10

## மனித உயிரியளவுகள் எனும் படைப்பு அற்புதம்





## தீக்கிரையாக்கும் கொடூர நிகழ்வுகள்!




## வாழ்வியல் அளவுகோல்கள் தந்த ரமலான்

# நன்றி சொல்லும் மாதம் ரமலான்!

இடைத்தரகர்கள் இன்றி பொருட்செலவின்றி சடங்கு சம்பிரதாயங்கள் இன்றி எளிமையாக யாரும் எப்போதும் இறைவனை நெருங்க முடியும் வணங்க முடியும் என்பதை மனித குலத்துக்குக் கற்றுக் கொடுத்த திருக்குர்ஆன் இறங்கிய மாதம் ரமலான்!

- அவ்வேதம் மட்டும் வந்திருக்காவிட்டால் இன்றும் நாங்கள் ஆள்தெய்வங்களிடமும் உணர்வில்லாப் பொருட்களின் முன்னாலும் சமாதிகள் முன்னாலும் சரணடைந்திருப்போம். எங்கள் சம்பாத்தியங்களை காணிக்கைகளாகக் கொட்டி இருப்போம். சுயமரியாதையை இழந்திருப்போம்!

- எங்கள் முன்னோர்கள் கற்பித்த மூடநம்பிக்கைகளில் மூழ்கிப் போய் எங்கள் குழந்தைகளை இஷ்ட தெய்வங்களுக்கு நாங்களே நரபலிகொடுத்து இருப்போம்! ஆன்மீகம் என்ற போர்வையில் வரும் ஆசாமிகளுக்கு இரையாகி இருப்போம். பெண்களின் கற்புகளை இழந்திருப்போம்.

- நிறத்தின், இனத்தின், சாதிகளின் பெயரால் மூட்டப்படும் தீண்டாமைத் தீயில் மானிட உணர்வுகள் பொசுங்கிப் போய் எங்களை நாங்களே வெட்டி சாய்த்திருப்போம்! சக மனிதன் என் உடன்பிறப்பே என்பதை உணரவைத்த அந்த வேதம் மட்டும் வந்திருக்காவிட்டால் இன்றும் அக்கொடுமைகளுக்கு நாங்களும் துணை போயிருப்போம்.

- இடைத்தரகர்கள் வாய்மொழிகளை வேதங்களாக நம்பி பகுத்தறிவை இழந்திருப்போம்.. அவர்கள் இடுகின்ற கட்டளைகளை சிரமேற்கொண்டு பணிந்திருப்போம்... அவர்களின் பாதங்களைக் கழுவிக் குடித்திருப்போம்.... உழைத்து வியர்வை சிந்தி சேர்த்த எங்கள் சம்பாத்தியங்களை அவர்களின் காலடிகளில் சமர்ப்பித்து இருப்போம்! இவற்றில் இருந்தெல்லாம் எங்களையும் எங்கள் தலைமுறைகளையும் காத்த இறைவனுக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் தகும்!

ஆம், திருக்குர்ஆன் என்ற இறை அற்புதம் பூமிக்கு வந்திறங்கி அது நிகழ்த்திய புரட்சியால் மறுமலர்ச்சியால் பயன்பெற்ற உலகெங்கும் பரவிக்கிடக்கும் கோடிக் கணக்கான உள்ளங்களின் உணர்வலைகளை எடுத்தெழுத முயன்றாலும் முடியாது.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 9 ஜூன் 2018 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

*ரமலான் நோன்பு (உண்ணாவிரதம்) கேள்வி-பதில்கள் -2*
*விருந்தோம்பலும் விருந்தை ஏற்பதும் -5*
*இவற்றுக்கும் ரமலானுக்கும் என்ன தொடர்பு?-6*
*தீக்கிரையாக்கும் கொடூர நிகழ்வுகள் ! -8*
*தற்காப்பில் மரணித்தாலும் சொர்க்கமே! -14*
*இணையத்திருட்டை முறியடிக்கும் மனித உயிரியளவுகள் -15*
*வாசகர் எண்ணம் -17*
*அறிவியலுக்கு வித்திட்டு உரமூட்டி வளர்த்த சில விஞ்ஞானிகள் -18*
*பசி அவர்களை வெளியேற்றியபோது... -20*
*வீடுவரை ரகு! -21*

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# ரமலான் நோன்பு (உண்ணாவிரதம்) கேள்வி-பதில்கள்

## 1. ரமலான் நோன்பு என்பது என்ன?

நோன்பு என்பது இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக பசி, தாகம், இச்சை இவைகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட நேரம் வரை - அதாவது விடியற்காலையில் இருந்து சூரியன் மறையும் நேரம் வரை - கட்டுப்படுத்திக் கொள்வதாகும். நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

● **விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போன்று உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது, (அதனால்) நீங்கள் (உள்ளச்சம் பெற்று) பயபக்தியுடையவர்களாகலாம். (திருக்குர்ஆன் 2: 183)**

## 2.நோன்பை எவ்வாறு பேணவேண்டும்?

இறைவனுக்கு பயந்து, அவன் ஏவியவைகளை செய்தும், தடை செய்தவைகளை தவிர்த்தும் பொறுப்புணர்வோடு நடப்பதுதான் இறையச்சமாகும். அதற்கு உரிய பயிற்சியை நோன்பு கொடுக்கின்றது. பசியோடும், தாகத்தோடும் இருப்பது மாத்திரம் நோன்பாகாது. இவைகளை கட்டுப்படுத்துவது போல் மற்ற எல்லா பாவங்களையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

● யார் கெட்ட பேச்சுக்களையும், கெட்ட செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உணவை விடுவதிலும், குடிப்பை விடுவதிலும் இறைவனுக்கு எந்த தேவையும் இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஆதாரம்: நபிமொழி நூல் புகாரி)

● எத்தனையோ நோன்பாளிகள் தனது நோன்பிலிருந்து பசியைத்தான் உணர்கிறார்களே தவிர வேறு எதையும் உணர்வதில்லை. எத்தனையோ இரவு நேரங்களில் நின்று வணங்கும் தொழுகையாளிகள் கண்விழித்தைத்தவிர வேறு எதையும் உணர்வதில்லை.( அறிவிப்பாளர்: அபுஹுரைரா (ரழி) நூல்: நஸயி, இப்னுமாஜா, ஹாகிம்.)

## 3. ரமலான் நோன்பு கட்டாயமான ஒன்றா ?

ரமலானில் நோன்பு நோற்பதை கடமையான வணக்கங்களுள் ஒன்றாக ஆக்கியிருக்கிறது இஸ்லாம்.

● 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமாலானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என இப்னு உமர்(ரலி) அறிவித்தார்.

## 4. ஏன் ரமலான் மாதம்?

இந்த மாதத்தில்தான் மனிதகுலம் எது நன்மை எது தீமை என்று தெளிவாகப் பிரித்தறிவிக்கக் கூடியதும் முழுமையான வாழ்வியல் வழிகாட்டியுமான திருக்குர்ஆனை பரிசாகப் பெற்றது. திருமறைக் குர்ஆனின் வெளிப்பாட்டின் துவக்கத்தைக் கொண்டாடும் விதமாகவே

இம்மாதம் உலகெங்கும் கண்ணியப்படுத்தப் படுகிறது. உயிரோடிருக்கும்போது இம்மாதத்தை அடையும் ஒவ்வொருவர் மீதும் பகலில் விரதமிருப்பது படைத்த இறைவனால் கடமையாக்கப் பட்டுள்ளது. அந்தக் கட்டளையைத் தாங்கி வரும் வசனம் இதோ:

● **ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது, ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும், ......,,(திருக்குர்ஆன் 2:185)**

## 5.நோன்பின் மூலம் உண்டாகும் சமூக நன்மைகள் எவை?

நோன்பின் மூலம் தனி நபர் ஒழுக்கத்திற்குத் தேவையான ஆன்மீகப் பரிசுத்தமும் சுயக் கட்டுப்பாடும் சமூகத்தின் தேவை உணரும் பண்பும் உருவாகின்றன. சக நோன்பாளிக்கு உணவளிப்பது அந்த நோன்பாளி பெறும் நற்கூலிக்கு சமமான கூலியைப் பெற்றுத்தரும் என்பது நபிமொழி. இதன் காரணமாக ரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களில் செல்வந்தர்கள் முன்வந்து ஏற்பாடு செய்யும் நோன்புக் கஞ்சி விருந்தும் இப்தார் உணவுவிருந்துகளும் சகஜமாக நடைபெறுவதைக் காணலாம். இந்த விருந்துகளில் ஏழை பணக்காரன், மொழி வேற்றுமை போன்றவை மறந்து அனைவரும் சமபந்திகளில் அமர்ந்து உணவுண்பதும் நடைபெறுகின்றன.

## 6.நோன்பு யார் மீது கடமை?

புத்தி சுவாதீனமுள்ள, பருவமடைந்த, ஊரில் இருக்கக்கூடிய நோன்பு நோற்க சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண் அனைவருக்கும் நோன்பு நோற்பது கடமையாகும்.

## 7. நோன்பு யார் மீது கடமை இல்லை?

● தற்காலிக நோயாளி (குணமாக கூடிய நோயாளி): நோன்பு நோற்பது இவருக்கு சிரமமாக இருந்தால் இவருக்கு நோன்பை விட்டுவிட சலுகை இருக்கிறது. ஆயினும் விடுபட்ட நோன்பை பின்னர் நோற்க வேண்டும்.

● நிரந்தர நோயாளி: நோய் குணமாகாது என்ற அளவிற்கு நிரந்தர நோயாளியாக இருப்பவர் நோன்பு நோற்பது கட்டாயமில்லை. ஆயினும் அவர் அதற்கு பகரமாக ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும்.

● பயணி: பயணிகளுக்கு அவர் தன் ஊருக்கு திரும்பி வரும்வரை நோன்பை விட்டுவிட சலுகையிருக்கிறது. பிரயாணி தன் பிரயாணத்தை முடித்துக் கொண்டதும் விட்ட நோன்புகளை நோற்க வேண்டும்

● கர்ப்பிணிப்பெண் மற்றும் பாலூட்டும் தாய்: இவர்கள் நோன்பு நோற்பதினால் தனக்கோ அல்லது குழந்தைக்கோ ஏதும் ஆபத்து ஏற்படுமென்று பயந்தால் நோன்பை விட்டுவிடலாம், இவர்கள் குழந்தையை பெற்றெடுத்ததற்கு பிறகு அல்லது பாலூட்டியதற்கு பிறகு விடுபட்ட நோன்புகளை நோற்க வேண்டும்.

● நோன்பு நோற்க இயலாத முதியவர்கள்: இவர்களுக்கு நோன்பை விடுவதறக்கு அனுமதி உண்டு. இவர்கள் ஒரு நாளைக்கு ஒரு ஏழைக்கு

வீதம் உணவளிக்க வேண்டும். அல்லாஹ் நன்கறிந்தவன்.

**8. ரமலான் மாதத்தின் சிறப்புகள் யாவை?**

நபிமொழிகளில் கூறப்படும் ரமலான் மாதத்தின் சிறப்புகள்:

- ரமலான் (மாதம்) வந்துவிட்டால் அருள்களின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. (நூல்: நஸயீ)
- ரமலான் மாதத்தின் முதல் இரவிலேயே ஷைத்தான்களுக்கும் கெட்ட ஜின்களுக்கும் விலங்கிடப்படும்.(திர்மிதீ)
- இறைவன் மீது நம்பிக்கை கொண்டவராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் ரமளான் மாதத்தில் யார் நோன்பு நோற்கின்றாரோ அவரின் முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும். (புகாரி)
- ரமலானின் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுகின்றது

**9. நோன்பு நோற்பதன் சிறப்புகள் யாவை?**

நபிமொழிகளில் நோன்பு நோற்பதன் சிறப்புகள்:

- நோன்பு நரகத்திலிருந்து பாதுகாக்கும் ஒரு கேடயமாகும். (அஹ்மத்)
- நோன்பு இறைவனிடத்தில் பரிந்துரை செய்யும் (அஹ்மத்)
- நோன்பாளிகள் மட்டுமே ரய்யான் என்னும் சிறப்பு வாசல் வழியாக சுவனத்திற்குள் பிரவேசிப்பார்கள் (புகாரி)
- நோன்புக்குரிய கூலியை இறைவனே கொடுக்கின்றான். (திர்மிதி)
- நோன்பாளிகள் நோன்பு திறக்கும் வரை அவருக்காக வானவர்கள் பாவமன்னிப்பு தேடுகின்றனர்.
- நோன்பாளிகளின் பிரார்த்தனைகள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. (பைஹகி)

**10. ரமலானின் துவக்கம் எப்போது?**

- "பிறையைக் கண்டே நோன்பு நோறுங்கள், நோன்பை முடிக்கவும் செய்யுங்கள். மேகம்(பிறையை) மறைத்துவிட்டால் ஷ∴பான் மாதத்தை முப்பது நாட்களாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

**11.நோன்பை முறிக்கும் விஷயங்கள் யாவை?**

- உடலுறவில் ஈடுபடுதல்
- சாப்பிடுவது, குடிப்பது
- மாதவிடாய் ஏற்படுதல்
- பிரசவ கால இரத்தம் வெளியேறுதல்
- வேண்டுமென்றே வாந்தியெடுப்பது
- முத்தமிடுதல், சுய இன்பம் போன்றவற்றின் மூலம் இந்திரியம் வெளிப்படுத்துவது
- நரம்பு வழியாக சத்தூசி போன்றவற்றை உட்கொள்ளுதல்
- இரத்ததானம் போன்றவற்றுக்காக இரத்தம் வெளியேற்றுதல்

**12. எதைக்கொண்டு நோன்பு திறக்க வேண்டும்?**

கனிந்த பேரித்தம் பழம் மூலம் நோன்பு திறப்பது நபிவழி ஆகும். அது கிடைக்காவிடில் காய்ந்த பழம் பேரீத்தம் மூலமும் அதுவும் கிடைக்காவிடில் தண்ணீர் மூலமும் அதுவும் கிடைக்காவிடில் கிடைப்பதைக் கொண்டு நோன்பு திறப்பது நபிவழி ஆகும்.

**13. ரமலான் இரவுத் தொழுகையின் (தராவீஹ்) சிறப்பு என்ன?**

● 'எவர் ரமலான் இரவில் நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் என்ற எண்ணத்துடனும் நின்று வணங்குகிறாரோ அவரது முன் சென்ற பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படுகின்றன' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

**14. ஈகைத் திருநாள் என்பது என்ன?**

இம்மாதத்தின் நிறைவை கொண்டாடும் நாளே 'ஈதுல் பித்ர்' அதாவது ஈகைத் திருநாள். அந்நாளை ஏழைகளும் நலிந்தோரும் உட்பட அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக தான் உண்ணும் உணவு தானியங்களை தன்னைச் சூழவுள்ள ஏழைகளை கண்டறிந்து கட்டாயமாக வழங்கிவிட்டே வசதி உள்ளோர் கொண்டாடவேண்டும் என்று வலியுறுத்துகிறது இஸ்லாம்! இதனாலேயே இந்நாள் ஈகைத் திருநாள் என்று அறியப்படுகிறது.

# விருந்தோம்பலும் விருந்தை ஏற்பதும்

● "யார் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்புகிறாரோ, அவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்கள்: புகாரி, முஸ்லிம்

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

● யார் விருந்தழைப்பை ஏற்க மறுக்கிறாரோ, அவர் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் மாறு செய்துவிட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்கள்: புகாரி,

● "அல்லாஹ்வின் தூதரே! நான் ஒரு மனிதரிடம் சென்றபோது, அவர் எனக்கு விருந்தளிக்கவில்லை. அதன் பின்னர், அவர் என்னிடம் வருகிறார். நான் அவருக்கு விருந்தளிக்க வேண்டுமா? அல்லது அவர் என்னிடம் நடந்து கொண்டதைப் போல் நடக்கட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அவருக்கு விருந்தளிப்பீராக!" என்றார்கள்.

அறிவிப்பவர்: அபுல் அஹ்வால், நூல்: திர்மிதீ

● "உணவுத் தட்டு வைக்கப்பட்டால் அது தூக்கப்படும் வரை எவரும் எழக்கூடாது. தனக்கு வயிறு நிரம்பிவிட்டாலும் கூட்டத்தினரின் வயிறு நிரம்பும் வரை தனது கையை தட்டிலிருந்து எடுக்கக் கூடாது. ஏனெனில் அவருடன் சாப்பிடுபவருக்கு உணவு தேவையிருக்கும் நிலையிலே வெட்கப்பட்டு தனது கையை அவர் எடுத்துவிடக்கூடும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். (அறிவிப்பவர்: இப்னுஉமர் (ரலி) இப்னுமாஜா)

# இவற்றுக்கும் ரமலானுக்கும் என்ன தொடர்பு?

**அதிலென்ன தவறு?**

● சிலருக்கு லெக்கின்ஸ் என்பது ஆபாச உடை, வேறு சிலர் அதில் தவறே இல்லை என்கிறார்கள்.

● சிலருக்கு நிர்வாணம் என்பது கலை. ஆனால் அதையே தங்கள் குடும்பப் பெண்கள் கடைப்பிடித்தால் கூடாது என்கிறார்கள்.

● சிலருக்கு உயிரினங்களை கொன்று உண்பது பாவகரமான செயல், ஆனால் அவ்வாறு உண்பவர்களைப் பொறுத்தவரையில் அது பாவமல்ல.

● மதுவினால் சீரழிந்த குடும்பங்கள் மதுவிலக்கு கோரி போராட்டம் நடத்தும்போது மறுபுறம் அதற்கெதிராக மது அருந்துவது தனிமனித உரிமை என்று கூறி வேறொரு கூட்டம் மதுவிலக்குக்கு எதிராகப் போராடுகிறது..

● காதல் என்பதைப் புனிதமானது என்பார் சிலர். "உங்கள் மகளை அவளுக்கு விருப்பமானவரைக் காதலிக்க விடுவீர்களா? என்று அவர்களில் யாரிடமாவது கேட்டால் "அதெப்படி முடியும்?" என்பார்.

● நாங்கள் வெள்ளையர்கள், எங்கள் மொழியே உயர்ந்தது என்று வாதித்து கறுப்பினத்தவரை அடிமையாக்கினார்கள்.

● ஒரு சாரார் நாங்கள் கடவுளுக்கு நெருக்கமானவர்கள், நாங்களே உயர்ந்த குலம் என்று வாதித்து மற்றவர்களை தீண்டாத்தகாதவர்களாக நடத்தினார்கள்.

இவ்வாறு ஆளுக்கு ஆள், இடத்துக்கு இடம், இனத்துக்கு இனம், நிறத்துக்கு நிறம், நாட்டுக்கு நாடு என மக்கள் வெவ்வேறு விடயங்களில் ஒருவருக்கொருவர் முரண்பட்ட நிலைப்பாடு கொள்வதை நாம் அறிவோம். ஒருவருக்குப் பாவமாகப் படுவது மற்றவருக்கு புண்ணியமானதாகப் படுகிறது. ஒருவருக்குப் புனிதமானதாகப் படுவது மற்றவைக்கு பாவமாகவோ அருவறுபபானதாகவோ படுகிறது. இதில் யார் மற்றவர் மீது ஆதிக்கம் பெறுகிறார்களோ அவர்கள் தம் கருத்துக்கு இணங்காதவர்கள் மீது தம் அடக்குமுறைகளை அவிழ்த்து விடுகிறார்கள். ஆனால் பலதரப்பட்ட மக்கள் இணைந்து நல்லிணக்கத்தோடு வாழவேண்டுமானால் அங்கு அனைவருக்கும் பொதுவான நியாயமான சட்டங்கள் இயற்றப்பட்டு அவை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

**அளவுகோலின்றி அல்லல்படும் நாடு!**

நாட்டின் அமைதியின்மைக்கும் நீதியும் நியாயமும் கேலிக்குரியதாவதற்கும் முக்கிய காரணம் சரி எது, தவறு எது அல்லது நன்மைகள் எவை தீமைகள் எவை என்பதைப் பற்றி தெளிவான அறிவில்லாமல் மனிதன் தன் மனம்போன போக்கில் இயற்றும் சட்டங்களே! பலதரப்பட்ட மக்களும் பல்வேறு விதமான ஜீவராசிகளும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் இவ்வுலகில் அனைவருக்கும் உரிமைகள் உள்ளன. அவற்றை நீதமாகப் பங்கிடக் கூடிய சட்டங்கள்

இயற்றப்பட வேண்டுமானால் அதற்கு பரந்த விசாலமான அறிவும் மிக ஆழமான நுண்ணறிவும் பக்குவமான தூரநோக்கும் அத்தியாவசியமானதாகும். இப்பரந்து விரிந்த உலகில் நீர்க்குமிழி போன்று வாழ்ந்து மறையும் ஆறடி மனிதனுக்கு அந்த இயல்புகள் இல்லை என்பதை நாம் அறிவோம். அப்படிப்பட்ட அறிவும் ஆற்றலும் இவ்வுலகின் அதிபதியாகிய இறைவன் ஒருவனுக்கு மட்டுமே உண்டு என்பது தெளிவு!

## இறை வழங்கும் அளவுகோல்

அந்த இறைவன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான் அறிவுடைமை. அதுவே இவ்வுலகில் தனிநபர் நல்லொழுக்கத்திற்கும் சமூகத்தில் அமைதிக்கும் பல்வேறு சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும்.

மட்டுமல்ல, ஆன்மீக ரீதியாக இவ்வுலகம் என்ற இந்தப் பரீட்சைக் களத்தில் இறைவன் எதைச் செய் என்று சொல்கிறானோ அதுவே புண்ணியம் என்பது. அவன் எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் என்பது! எந்த மனிதனும் மனிதர்களின் குழுக்களும் நீதிமன்றங்களும் சட்டசபைகளும் பாராளுமன்றங்களும் இன்ன பிற ஆன்மீக மற்றும் அரசியல் தலைவர்களும் பாவ-புண்ணியங்கள் எவை என்பதைத் தீர்மானிக்க முடியாது. காரணம் இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதி இறைவன் மட்டுமே. அன்று அவனே நமது வாழ்க்கையில் நாம் செய்த புண்ணியங்களையும் பாவங்களையும் கணக்கிட்டு அதன் அடிப்படையில் நமக்கு சொர்க்கத்தையோ நரகத்தையோ விதிக்க இருக்கிறான்.

## பக்குவமான அளவுகோல் இறங்கிய மாதம்

எனவே நமக்கு இம்மைக்கும் மறுமை வாழ்வுக்கும் நன்மை பயப்பது இறைவன் தரும் வாழ்வியல் சட்டங்களேயாகும். சரி எது தவறு எது நல்லது எது தீயது எது நியாயம் எது அநியாயம் எது என்பதைப் பிரித்தறிய இறைவன் எதை அளவுகோலாக தருகிறானோ அதுவே அதிபக்குவமானதும் பின்பற்றத் தக்கதும் ஆகும். இன்று இவ்வுலகில் வாழும் மக்களுக்காக இலட்சிய அளவுகோலை (ideal criterion) இறைவன் அவனது இறுதித் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு வழங்கினான். அதுவே திருக்குர்ஆன் என்ற இறை அற்புதம். அந்த திருக்குர்ஆன் இறக்கியருளப்பட்ட மாதமே ரமலான் என்ற அரபு மாதம். அதை கொண்டாடும் விதமாகவே உலகெங்கும் முஸ்லிம்கள் இந்த மாதம் முழுவதும் விரதம் இருக்கிறார்கள்

**● ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும், (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது, ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்...... (திருக்குர்ஆன் 2:185)**

# தீக்கிரையாக்கும் கொடூர நிகழ்வுகள் !

ஆதிக்க வெறிகொண்ட கொடுங்கோலர்கள் அப்பாவிகளை தீக்கிரையாக்கும் நிகழ்வுகள் மனித வரலாற்றில் பல்வேறு காலகாட்டங்களில் நடந்துள்ளன. இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

- தங்களைத் தாங்களே கடவுள் என்று அறிவித்துக்கொண்ட சில அரசர்கள் அவர்களை வணங்க மறுத்தவர்களையும் எதிர்த்தோரையும் இவ்வாறு தண்டித்தார்கள். சில அரசர்கள் தாங்கள் பரம்பரை பரம்பரையாக வழிபாட்டு வந்த தெய்வங்களை வணங்க மறுத்தோரை இவ்வாறே தண்டித்தார்கள்.

- தங்களின் ஆணவத்திற்கும் அடக்குமுறைகளுக்கும் சதித்திட்டங்களுக்கும் எதிராக நின்றோரை தண்டிப்பதற்கும் பலவீனர்களை அல்லது நலிந்தோர்களை அச்சுறுத்தி அடக்குமுறை செய்வதற்கும் சில ஆட்சியாளர்கள் இதைக் கையிலெடுத்தார்கள்.

- காலனி ஆதிக்க பயங்கரவாத சக்திகள் தங்களின் ஆயுதபலத்தால் அவர்கள் கைப்பற்றிய கண்டங்களில் அல்லது நாடுகளில் அங்கு வாழ்ந்த பூர்வ குடியினரை கூட்டம் கூட்டமாக இனம் இனமாக கொன்று குவித்தார்கள். அந்நாட்டு இயற்க்கை வளங்களையும் நிலத்தடி வளங்களையும் கொள்ளையடிப்பதற்காகவும் தங்கள் வெள்ளை இனத்தாரைக் குடியேற்றுவதற்காகவும் அப்பாவிகள் மீது பயன்படுத்திய தண்டனை முறைகளில் தீக்கிரையாக்குதலும் ஒன்று.

- காலனி ஆதிக்க சக்திகளின் மறு பரிணாமமான வல்லரசு ஏகாதிபத்திய சக்திகள் இன்று தங்கள் கைப்பாவை அரசர்கள் அல்லது ஆட்சியாளர்கள் மூலம் அவர்களை எதிர்த்தோரையும் விடுதலை வீரர்களையும் மனித உரிமைப் போராளிகளையும் தண்டிக்க கையாளும் முறைகளில் கொடுமையானது மக்களை தீக்கிரையாக்குதலே.

- இன்று அரசியல் கட்சிகளும் வகுப்புவாத சக்திகளும் எதிரிகளைப் பழிவாங்கும் நடவடிக்கையாகவும் எச்சரிப்பதற்காகவும் இதைக் கையாள் கிறார்கள்.

அன்றைய காலத்தில் வலுவான தீக்குண்டங்களை உருவாக்கி அதில் அப்பாவிகளை அவற்றில் எறிந்து எரித்துக் கொன்றார்கள். இன்று அப்பாவி மக்களை அவர்கள் வாழும் குடிசைகளுக்குள் வைத்து உயிரோடு கொழுத்துகிறார்கள். அல்லது அவர்கள் வாழும் சேரிப்பகுதிகளை சுற்றி வளைத்து அவற்றை தீக்கிரை யாக்குகிறார்கள்.



## இறைவன் ஏன் இவற்றைத் தடுப்பதில்லை?

ஒரு மனிதனை தீயிட்டுக் கொழுத்துவதுதான் வேதனைகளிலேயே மிகப்பெரிய வேதனை. அதுவும் ஒரு அப்பாவி இவ்வாறு அவன் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்படும்போது இதையெல்லாம் கண்டு கொண்டிருக்கும் இறைவன் ஏன் அதைத் தடுக்காமல் நின்று வேடிக்கை பார்க்கிறான்? இக்கேள்வி பெரும்பாலான மக்களுக்குள் எழுவது இயல்பே.

உண்மையில் அணு முதல் அண்டசராசரங்கள் வரை அனைத்தையும் அதிபக்குவமாகப் படைத்து அற்புதமான முறையில் இயக்கி வரும் இறைவன் நாடினால் இக்கொடுமைகளை நடக்கும் முன்னரே தடுக்க முடியும். ஆனால் இவ்வுலகைப் படைத்தவன் இந்தக் குறுகிய நம் வாழ்வை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்குரிய பரீட்சைக்கூடமாகவும் படைத்துள்ளான் என்ற உண்மையை நாம் உணரும்போது இக்கேள்வி பற்றிய தெளிவு ஏற்படும்.

ஒரு பரீட்சைக் கூடத்தில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஏதேனும் மாணவன் தவறாக விடைஎழுதிக் கொண்டிருப்பதைக் கண்ட ஒரு மேற்பார்வையாளர் உடனே குறுக்கிட்டு அந்த மாணவனைத் திருத்தினாலோ அல்லது அவனை உடனேயே தண்டித்தாலோ அங்கு பரீட்சையின் நோக்கம் நிறைவேறுமா? அதைப்போன்றதுதான் இறைவன் நடத்திவரும் பரீட்சையும்! இறைவன் இவ்வுலகு என்ற பரீட்சைக் கூடத்திற்கு ஒரு தவணையை நிச்சயித்துள்ளான். அக்கூடத்திற்குள் வந்து செல்லும் ஒவ்வொருவருக்கும் வேறுவேறு தவணைகளை நிச்சயித்துள்ளான். அனைவருக்கும் அதை முழுமிக்க வாய்ப்பளிக்கிறான். ஒருசிலர் அவசரப் படுவதுபோல இறைவன் விரைந்து ஏன் தண்டிப்பதில்லை என்ற கேள்விக்கு இறைவனே தன் திருமறையில் பதில் கூறுகிறான்:

- **மனிதர்களுடைய அநீதியின் காரணமாக அவர்களை இறைவன் தண்டிப்பதாக இருந்தால் பூமியில் எந்த உயிரினத்தையும் அவன் விட்டுவைக்க மாட்டான். மாறாக குறிப்பிட்ட காலக்கெடு வரை அவர்களைப் பிற்படுத்தியிருக்கிறான். அவர்களின் கெடு வந்ததும் சிறிது நேரம் பிந்தவும் மாட்டார்கள். முந்தவும் மாட்டார்கள். (திருக்குர்ஆன் 16:61)**


# இயேசுவைப் பின்பற்றியோருக்கு வந்த சோதனை!

திருமறைக் குர்ஆனின் 85 - வது அத்தியாயம் ஓரிறைக் கொள்கைவாதிகள் தீக்கிரையாக்கப்பட்ட நிகழ்வை மையமாகக் கொண்டுள்ளது. நபிகளாரின் வருகைக்கு முன்னர் வந்த இறைத்தூதர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்ந்த மக்களுக்கு நேர்ந்த சம்பவம் அது. இயேசு கிறிஸ்து (அவர்மீது இறைசாந்தி உண்டாவதாக) போதித்த ஏக இறைக்கொள்கையை பலமாகப் பின்பற்றி வாழ்ந்தார்கள் நஜ்ரான் தேசத்து மக்கள். கி.பி. 523ம் ஆண்டில் யமன் நாட்டை ஆட்சி செய்த ‘தூ நுவாஸ்’ என்ற யூதக் கொடுங்கோலன் அந்த நஜ்ரான் வாசிகள் மீது கொடூரமான தாக்குதலைத் தொடுத்தான். அவர்களை பலவந்தமாக

இயேசுவின் மார்க்கத்திலிருந்து மாற்றிட முனைந்தான். அவர்கள் மறுத்ததன் காரணமாக பெரும் அகழ்களைத் தோண்டி நெருப்புக் குண்டத்தை வளர்த்து, அதனுள் அவர்களை வீசி எறிந்தான்.

இது போன்று கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களோடும் இன்று நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களோடும் இனி எதிர்காலங்களில் நடக்கவிருக்கும் சம்பவங்களோடும் தொடர்புடைய அனைவருக்கும் எச்சரிக்கை விடுக்கும் தொனியில் அமைந்துள்ளன இந்த அத்தியாயத்தின் வசனங்கள்.

“ஒ கொடுங்கோலர்களே, அக்கிரமக்காரர்களே, ஆதிக்கசக்திகளே,



அகங்காரிகளே நீங்கள் இந்த பூமியின்மீது நிகழ்த்திய அக்கிரமங்களுக்கான தண்டனைகளை அனுபவிக்கத்தான் போகிறீர்கள். நீங்கள் நிகழ்த்திய கொடுமைகளுக்கான எதிர்வினையை உங்கள் வாழ்நாளில் அனுபவிக்காமலே தப்பித்திருக்கக்கூடும். ஆனால் நீதிமானான இறைவனின் நீதிமன்றம் மறுமையில் கூட இருக்கிறது. அதுவே இறுதித்தீர்ப்பு நாள்! அது உறுதியான ஒன்று. இன்று வானங்களையும் பூமியையும் எவ்வாறு உறுதியாகக் காண்கிறீர்களோ அதைவிட உறுதியான - தவிர்க்க முடியாத - நிகழ்வுதான் மறுமை விசாரணை என்பது. அந்நாளில் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பபட்டு நீங்கள் விசாரிக்கப்பட உள்ளீர்கள்.” எனும் எச்சரிக்கையை பலமாக முன்வைக்கின்றன அவை:

**85:1. உறுதியான கோட்டைகளைக் கொண்ட வானத்தின் மீது சத்தியமாக!**


**85:2. இன்னும், வாக்களிக்கப்பட்ட (இறுதி) நாள் மீதும் சத்தியமாக,**

**85:3. மேலும், சாட்சிகள் மீதும், சாட்சி சொல்லப்படுவதன் மீதும் சத்தியமாக,**

**85:4. (நெருப்புக்) குண்டங்களையுடையவர்கள் சபிக்கப்பட்டனர்.**

அக்கிரமக்காரர்கள் தாங்கள் நிகழ்த்திய அல்லது நிகழ்த்திக் கொண்டிருக்கும் கொடுமைகளுக்கு சாட்சிகள் காலப்போக்கில் அழிந்து போகலாம் அல்லது பலவந்தமாக அழிக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் மறுமை நாளன்று அவை அனைத்துமே உயிர்பெற்று வர உள்ளன.

## சாட்சிகளுக்குப் பஞ்சமில்லை



சற்று சிந்தித்தாலே உண்மை விளங்கும். பூமியானது தனது அச்சின் மீது தன்னைத்தானே சுழன்று கொண்டு சூரியனை சுற்றி வருவதும் சூரியன் தன் குடும்பத்தோடு அது சார்ந்த பால்வெளி அண்டத்தின் மையத்தை சுற்றி வருவதும் நாமறிந்தவையே. இவ்வாறான நம் பயணப் பாதையில் - விண்வெளியில் நாம் கடந்து செல்லும் பாதையில் ஆயினும் சரி, பூமியில் நம் இருப்பிடங்களில் ஆயினும் சரி - நமது உடல் வெளிப்படுத்தும் அகச்சிவப்பு கதிர்கள் (infrared rays) போன்றவையும் நாம் வெளிப்படுத்திய ஒலி, ஒளி, வாசம் போன்றவை மூலம் உண்டான மின்காந்த அலைகளும் (electromagnetic waves) அவற்றிற்குரிய பதிவை அக்கம்பக்கத்தில் ஏற்படுத்தாமல் செல்வதில்லை என்று அறிவியல் கூறுகிறது. மேலும் மனித மூளை நமது செயல்களை இடையறாது பதிவு செய்கிறது என்பதை நாம் அனுபவபூர்வமாகவே அறிவோம். ஒளி அலைகள் கண்களால் ஏற்கப்படுவதையும் ஒலி அலைகள் காதுகளால் ஏற்கப்படுவதையும் அவற்றை உரிய இடங்களில் பதிவு செய்வதையும் இன்றைய அறிவியல் நமக்கு சொல்லித் தருகிறது. இன்று நாம் காணும் **cctv** கேமராக்களை விட பன்மடங்கு உயர்வான தொழில்நுட்பத்தைக் கொண்டவை நமது கண்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியது இல்லை.



## அக்கிரமக்காரனே முதல் சாட்சி

இவ்வாறு எந்த ஒரு அக்கிரமம் நிகழ்ந்தாலும் அதற்கு முதல் சாட்சியாக அதை நிகழ்த்துபவனே திகழ்கிறான். அடுத்து அக்கிரமத்திற்கு உள்ளாபவர்களும் சுற்றுப்புறங்களும் பூமியும் விண்வெளியும் சாட்சிகளாக நிற்கின்றன. அழிக்கமுடியாத அனைத்துவிதமான சாட்சிகள் மீதும் சத்தியம் செய்து நெருப்புக்குண்டத்தார் சபிக்கப்பட்டு விட்டனர் என்கிறான் இறைவன்.

தொடர்ந்து அந்த நெருப்புக் குண்டத்தைப் பற்றியும் அந்த காட்சியையும் பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகிறான்:

**85:5. (அது எத்தகைய தீக்குண்டமெனில்) அதில் நன்கு கொழுந்து விட்டெரியும் எரிபொருள் இருந்தது.,**

**85:6,7 அவர்கள் அதன் ஓரத்தில் அமர்ந்திருந்து நம்பிக்கையாளர்களை (நெருப்புக் கிடங்கில் போட்டு) நோவினை செய்வதை அவர்கள் (வேடிக்கையாகப்) பார்த்துக் கொண்டுமிருந்தார்கள்.**

ஆம், எந்தக் கண்களைக் கொண்டு அக்காட்சியை இரசித்துக் கொண்டிருந்தார்களோ அந்தக் கண்களே அவர்கள் நிகழ்த்தும் கொடுமைக்கு மறுமையில் சாட்சிகூற உள்ளன என்ற உண்மையை உணராமலேயே அன்று இருந்தார்கள்!

## எதற்காக தண்டித்தார்கள்?

**85:8. அந்த இறைநம்பிக்கையாளர்களிடம் இவர்கள் பகைமை பாராட்டியதற்குக் காரணம் இதைத் தவிர வேறு எதுவும் இல்லை: யாவற்றையும் மிகைத்தவனும் தனக்குத்தானே புகழுக்குரியவனுமான அல்லாஹ்வின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பதுதான்!**

**85:9. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரத்திற்கு உரிமையாளனும் அந்த இறைவனே. மேலும், அவன் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.**

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது பொருள்)

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வருபவன் மட்டுமே எங்கள் வணக்கத்திற்குரியவன், அவனல்லாது எதையும் எவரையும் நாங்கள் வணங்கமாட்டோம் என்ற ஓரிறைக் கொள்கையில் உறுதியாக இருந்ததனால்தான் அந்த அப்பாவிகள் தீக்குண்டத்தில் எறியப்பட்டார்கள்.

## இந்த ஓரிறைக் கொள்கை எதனால் எதிர்ப்புக்குள்ளாகிறது?

ஆம், ஓரிறைக் கொள்கை என்பது மனிதனை இனம், இடம், நிறம், மொழி போன்றவற்றின் பெயரால் கற்பிக்கப்படும் அடிமைத்தளைகளில் இருந்தும் வரம்புகளில் இருந்தும் விடுவித்து பரந்த மனப்பான்மை கொண்டவனாகவும் அவனை சுயமரியாதை உள்ளவனாகவும் ஆக்குகிறது. இந்த வரம்புகளுக்கப்பால் சகமனிதனை சகோதரனாகவும் சமமானவனாகவும் பார்க்கும் பண்பை அவனுக்குள் உண்டாக்கி விடுகிறது. இக்கொள்கை சுயமரியாதை உணர்வைத் தூண்டுவதால் மக்கள் விழிப்புணர்வு பெற்று தங்களுக்கு எதிராக அணிதிரள்வார்கள் என்று ஆதிக்க சக்திகள் அஞ்சுகிறார்கள். இறைவனை இடைத்தரகர் இன்றி நேரடியாக வணங்கச் சொல்வதால் கடவுளின் பெயரால் மூடநம்பிக்கைகளைப் பரப்பி குடிமக்களைச் சுரண்டும் இடைத்தரகர்களும் ஆதிக்க வர்க்கத்தினரும் அச்சம் அடைகிறார்கள். எனவே தங்கள் ஆதிக்கத்திற்கு வேட்டு வைக்கும் இந்த ஓரிறைக் கொள்கை மக்களிடையே பரவாமல் தடுக்க அதை ஏற்றுக்கொண்ட மக்களை அடியோடு துடைத்தெறிவதே ஒரே வழி என்று கருதினார்கள் அவர்கள். அதனால்தான் இந்தக் கொடூர தண்டனை!

## இஸ்லாம் சந்தித்துவரும் ஓயாத தாக்குதல்கள்

இன்றும் உலகெங்கும் இஸ்லாமியர்கள் தாக்குதல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாகி வருவதை அறிவீர்கள். சமீபத்திய உதாரணம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீதான தாக்குதல். இவற்றுக்குக்

காரணம் இஸ்லாம் ஓரிறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளதனால்தான். ஒன்றே மனிதகுலம், ஒருவன் மட்டுமே இறைவன், அவனிடமே நமது மீளுதலும் விசாரணையும் உள்ளது, மறுமையில் சொர்க்கமும் நரகமும் உள்ளன என்பனவற்றை இஸ்லாம் அடிப்படையாக போதித்து மக்களை இறையச்சம் உள்ளவர்களாக ஆக்குகிறது.



எங்கெல்லாம் இஸ்லாம் பரவுகிறதோ அங்கெல்லாம் அதர்மத்திற்கு எதிராக மக்களை விழித்தெழச் செய்கிறது. உலகில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமானால் அநியாயங்களும் மனித உரிமை மீறல்களும் தடுக்கப்படவேண்டும். ஏட்டளவில் பேச்சளவில் என்று இல்லாமல் இஸ்லாம் நடைமுறையில் மக்களை அதற்கு வழிநடத்துகிறது. நன்மையை எவுவதையும் தீமையைத் தடுப்பதையும் இறைநம்பிக்கையின் ஒரு பாகமாகவே கற்பிக்கிறது இஸ்லாம்.

● **மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (எனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள் இன்னும் இறைவன் மேல் நம்பிக்கை கொள்கிறீர்கள் (திருக்குர்ஆன் 3:110)**

இதன் காரணமாக மக்கள் அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அவற்றைக் கொண்டு பிழைப்பு நடத்தும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் எதிராகத் திரும்புகிறார்கள். இவ்வாதிக்க சக்திகளின் அடிமைத்தளையில் இருந்து தங்கள் நாடுகளை விடுவிப்பதற்காக அவர்களின் கையாட்களுக்கும் கைப்பாவை அரசுகளுக்கும் எதிராகப் போர்க்கொடி தூக்குகிறார்கள்.

## அக்கிரமக்காரர்களுக்கு இறைவனின் எச்சரிக்கை

இதுவரை அப்பாவிகள் மீது நடந்த அத்துமீறல்களுக்கும் சரி, தற்போது நடந்து கொண்டிருக்கின்றவற்றிற்கும் சரி, இனி எதிர்காலத்தில் நடக்கவிருக்கின்ற அத்துமீறல்களுக்கும் சரி கண்டிப்பாக இறைவனின் விசாரணையும் தண்டனையும் நிறைவேற உள்ளது என்பதை எச்சரிக்கின்றது அடுத்த வசனம்:

**85:10. இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மீது எவர்கள் கொடுமைகள் புரிந்தார்களோ, பிறகு அதற்காக மன்னிப்புக் கோரி மீளவில்லையோ, அவர்களுக்கு நிச்சயம் நரகவேதனை இருக்கிறது. மேலும், சுட்டெரிக்கும் தண்டனையும் உண்டு,**

## ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டும் வாக்குறுதிகள்

தொடரும் வசனங்கள் இறைநம்பிக்கை கொண்ட நன்மக்களுக்கு தன்னம்பிக்கையும் ஆறுதலும் அளிக்கும் வண்ணம் அமைந்துள்ளன. நீர்க்குமிழி போல மின்னி மறையும் இந்தக் குறுகிய பரீட்சை வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் சித்திரவதைகளும் உயிர் மற்றும் உடமைகளின் இழப்புகளும் தற்காலிகமானவையே.. சர்வவல்லமை கொண்ட இறைவனின் கண்காணிப்பின் கீழேயே அவை அனைத்தும்

நடைபெறுகின்றன. நீங்கள் இன்று கண்டுகொண்டு இருப்பது அல்லது அனுபவித்துக்கொண்டு இருப்பது நீண்ட வாழ்வின் மின்னி மறையும் வாழ்வின் முதல்கட்டம் மட்டுமே. வரவிருப்பதோ முடிவில்லாத மறுமை. மறுமை விடியும்போது நீதியின் வேட்கை முழுமை பெறும். குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படும்.. அதே போல நீங்கள் அனுபவித்த கொடுமைகளுக்கான பரிசுகள் எதுவும் வீண்போவதில்லை. மாறாக இறுதித்தீர்ப்பு நாளன்று அவை ஒப்பிலா வெகுமதிகளை பெற்றுத்தர உள்ளன. நித்திய வாழ்வும் நிரந்தர இன்பங்கள் கொண்ட சுவனங்களும் அவர்களுக்கு பரிசாகக் காத்திருக்கின்றன என்ற உண்மைகளை நினைவூட்டுகின்றன:

**85:11. எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்களுக்குத் திண்ணமாக சுவனங்கள் இருக்கின்றன. அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். இதுவே பெரும் வெற்றியாகும்.**

**85:12. உண்மையில், உம் இறைவனின் பிடி மிகக் கடுமையானது.**

**85:13. திண்ணமாக, அவனே முதன் முதலாகப் படைக்கின்றான். அவனே மீண்டும் படைப்பான்.**

**85:14. மேலும், அவன் அதிகம் மன்னித்தருள்பவனாகவும், அன்பு செலுத்துபவனாகவும் இருக்கின்றான்.**

**85:15,16. அர்ஷின் (அனைத்துலகங்களின் ஆட்சிபீடத்தின்) உரிமையாளனாகவும், மேன்மை மிக்கவனாகவும், தான் நாடுகின்றவற்றை செயல்படுத்துபவனாகவும் இருக்கின்றான்.**

# தற்காப்பில் மரணித்தாலும் சொர்க்கமே!

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, "இறைத்தூதரே! ஒருவன் எனது செல்வத்தைப் பறிக்கும் நோக்கத்தில் வந்தால் (நான் என்ன செய்ய வேண்டும்) கூறுங்கள்?" என்று கேட்டார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "அவனுக்கு உமது செல்வத்தை (விட்டு)க் கொடுக்க வேண்டியதில்லை" என்று கூறினார்கள். அந்த மனிதர், "அவன் என்னுடன் சண்டையிட்டால்...?" என்று கேட்டார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "நீரும் அவனுடன் சண்டையிட வேண்டியதுதான்!" என்று கூறினார்கள். "(அந்தச் சண்டையில்) அவன் என்னைக் கொன்றுவிட்டால்...?" என்று அந்த மனிதர் கேட்டார். அவர்கள், "அப்போது நீர் உயிர்த்தியாகி (ஷஹீத்) ஆவீர்" என்றார்கள். "நான் அவனைக் கொன்றுவிட்டால்...?" என்று அவர் கேட்டார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "அவன் நரகத்திற்குச் செல்வான்" என்று பதிலளித்தார்கள். (நூல்:ஸஹீஹ் முஸ்லிம்)

# இணையத்திருட்டை (Hacking) முறியடிக்கும் மனித உயிரியளவுகள்

**“ஹேக்“ செய்யப்படுவதிலிருந்து தப்பிப்பது எப்படி? - வழிகாட்டும் மனித உயிரியளவுகள் அங்கீகாரம்** - BioMetrics Authentication

உங்களின் முகநூலை யாரேனும் “ஹேக்“ செய்து விட்டார்களா? அல்லது உங்களது கிரெடிட் கார்டை பயன்படுத்தி “ஸ்மார்ட் டிவி“ வாங்கிவிட்டார்களா? இதை தடுப்பது எப்படி என்று தெரியாமல் கவலைப்படுகின்றீர்களா?


இணைய பாதுகாப்பில் (Cyber Security) சிறப்பு பட்டம் பெற விரும்புபவர்களுக்கு உலக அளவில் ஒரு சிறப்புத் தேர்வை நடத்தி வருகின்றனர். அந்த தேர்வில் ஒருவரின் அடையாளத்தை எப்படி உறுதி செய்வது என்பதோடு, எப்படியெல்லாம் ஹேக் செய்கின்றனர் என்பதையும் அதை முறியடிக்கும் வழியையும் கற்றுத் தருகின்றனர்.

அதில் கண்ட சில விடயங்கள் இறை நம்பிக்கையை எப்படி வலுப்படுத்துகிறது என்பதை எளிதாகப் புரியும் வகையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது இங்கே. சிந்திக்கும் மக்களுக்கு சரியான படிப்பினை உள்ளது.

## ஒற்றை முறை அடையாளம்

முகநூலில் நுழைவதற்கு முன் நீங்கள் உங்களின் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் கொடுக்க வேண்டும். இதை ஒற்றை முறை அடையாளம் காணுதல் அல்லது ஒற்றை காரணி அங்கீகாரம் (Single Factor Authentication) என்று சொல்வார்கள். இதைக் கணினியில் சிறிது சிறப்பு அனுபவம் பெற்றவர்களால் திருடி அல்லது சில குறிப்பிட்ட வகைகளில் உங்களிடமிருந்தே அதை பெற்றுவிட முடியும். இதே போல்தான் ஆன்லைன் வர்த்தகத்திலோ அல்லது வங்கியின் இணையத்திலோ உங்களின் அனுமதியின்றி, உங்கள் பெயரால் பணப் பரிவர்த்தனம் செய்து விடுகின்றனர்.

இதை முறியடிப்பதற்காக பல வகை அடையாளம் காணுதல் அல்லது பல காரணி அங்கீகாரம் (Multi Factor Authentication) என்ற முறையை கணினி நிபுணர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர். இதன் மூலம் வெறும் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் மட்டுமில்லாமல் இன்னும் பலவகையான நுணுக்கமான தகவல்களைக் கொண்டு பயனரை (customer) உறுதி செய்கின்றனர்.



இதனால்தான் ஆதார் கார்டு விண்ணப்பத்தின்போது உங்களின் கைரேகை, கண் போட்டோ மற்றும் உள்ளங்கை ஸ்கேன் போன்றவற்றை எடுத்திருப்பார்கள். அந்த அட்டைக்கு உரியவர் இவர்தான் என்பதை பல முறைகளில் உறுதி படுத்துவதற்காக தான் இப்படி செய்கின்றனர்.

அறிவியல் வளர்ச்சியில் மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ள தற்போதும் கூட, ஒரே ஒரு வகையில் எளிதாக அடையாளம் காணும் வழியை /படைப்பை உருவாக்க முடியவில்லை.

இறைவனின் படைப்பின் பக்குவம்தான் இங்கு உதவிக்கு வருகிறது. அதற்கு உதாரணம்தான் உயிரியளவுகள் அங்கீகாரம் (BioMetrics Authentication).




இதில் சிலவற்றை நாம் காண்போம்:

- விழித்திரை ஸ்கேன்கள் (Retina Scans) -
- கருவிழிப் படலம் ஸ்கேன் (Iris Scan)
- கைரேகை (Finger Print)
- உள்ளங்கை ஸ்கேன் (Palm Scan)
- கை வடிவியல் (Hand Geometry)
- இதய / நாடித்துடிப்பு முறை (Heart/Pulse Pattern)

## தனித்துவம் எனும் அற்புதம்

இன்னும் ஆய்வுகள் தொடர்கின்றன. வருங்காலங்களில் இதயத் துடிப்பின் மூலம் (இதய நோயால் கடுமையாக பாதிக்கப்படாத) ஒரு மனிதனை எல்லாவகையிலும் அடையாளம் காண முடியும் என்பதை ஆய்வுப் பூர்வமாக நிரூபித்து அதை ஒரு கடிகாரம் போல் வடிவமைத்துள்ளனர்.



விழித்திரை ஸ்கேன்கள் மூலம் மிகவும் நுண்ணியமாக உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனையும் அடையாளப்படுத்தி விட முடியும். ஒன்றுபோல் தோற்றமளிக்கும் இரு இரட்டையர்கள் கூட இதில் வேறுபடுவதாக அறிவியல் கூறுகின்றது.

இவ்வளவு முறைகளும் மனிதனின் உடல் உறுப்பை சார்ந்துதான் கண்டுபிடிக்க முடிகிறதே தவிர, அனைத்து நிபுணர்களும் சேர்ந்து இதுபோல் ஒன்றை, ஒற்றை முறை அடையாளமாக உருவாக்க முடியவில்லை. ஆனால் மனிதனின் உடலிலோ ஒன்றுக்கு மேற்பட்ட ஒற்றை முறை அடையாளங்கள் உள்ளன.

நாத்திகமோ, மனிதனின் கண்டுபிடிப்பை உயர்த்தி அவனின் அறிவுக்கு வழிகாட்டும் இறைவனை மறுக்கின்றது .

இவ்வளவு தனித்துவங்களையும் கொண்டுள்ள மனிதன், தானாக உருவானான் என்பதை பகுத்தறிவோடு சிந்திக்கும் எந்த மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

- **"(மரித்து உக்கிப்போன) மனிதனின் எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கவே மாட்டோம் என்று மனிதன் எண்ணுகின்றானா? அன்று**

**அவன் நுனி விரல்களையும் (முன்னிருந்தவாறே) செவ்வையாக்க நாம் ஆற்றலுடையோம்." (திருக்குரான் 75:3-4)**

**ஆராய ஆராய வளரும் அறிவு - அறிவியல்**

இறைவன் தான் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கி அவனுக்கு கற்றும் கொடுக்கின்றான். ஒரு வகுப்பில் படிக்கும் அனைத்து மாணவர்களின் சிந்திக்கும் திறனும் ஒன்றுபோல் இருப்பதில்லை. அதேபோல், ஆய்வுகளைக் கொண்டு இறைவனின் படைப்பை ஆய்வு செய்யும் அறிவியலாளர்களால் தான் இது போன்ற சாதனைகள் வெற்றிகாணப்படுகின்றன.

● **"மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். எனினும் நிச்சயமாக மனிதன் வரம்பு மீறுகிறான்." (திருக்குரான் 96:5-6)**

● **"நிச்சயமாக (இவ்வேதம்) உண்மையானதுதான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு நம்முடைய அத்தாட்சிகளை (உலகத்தின்) பல கோணங்களிலும், அவர்களுக்குள்ளேயும் சீக்கிரமே நாம் அவர்களுக்குக் காண்பிப்போம் (நபியே!) உம் இறைவன் நிச்சயமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது உமக்குப் போதுமானதாக இல்லையா?" (திருக்குரான் 41:53)**

சிந்திக்கும் மக்களுக்கு சரியான படிப்பினை உள்ளது.

நன்றி: scienceprovesquran.blogspot.com

# வாசகர் எண்ணம்

● பெருவெடிப்பில் தொடங்கிய பிரபஞ்சத்தின் ஆரம்பம் பற்றியும் விண்வெளி ஈர்ப்பு ஆதாரம் என்பது பற்றிய அறிவியல் பார்வையை திருக்குர்ஆன் அன்றே விளக்கியதை இன்றுதான் தங்கள் மூலம் அறிந்து கொண்டு வியந்தேன். தெளிந்தேன். நன்றிகள் பல.

தேனீக்கள் பற்றிய இரு கட்டுரைகளும் சிறப்பு. அறிவியல் உலகை இன்னும் வியக்க வைத்துக்கொண்டு இருக்கின்ற தேனீக்களின் செயல்பாடுகள் மிகத் தனித்துவமானவை. அதைச் சில வார்த்தைகளிலேயே அன்றே குரான் செறிவுடன் உணர்த்தியுள்ளது.

திருக்குர்ஆன் நற்செய்தி மலர் வாசகர் என்பது என் அறிவை விரிவுபடுத்தி வருகிறது.

- **தஞ்சை N.J. கந்தமாறன், சென்னை**

● எனது முஸ்லிம் நண்பர் அப்துல் காதர் அவர்களிடம் இருந்து பெற்று கடந்த 3 மாதங்களாக தங்கள் இதழை படித்துவருகிறேன். அருமையான கருத்துக்கள். தொடர்ந்து வாசிக்க விரும்புகிறேன். என் முகவரிக்கும் அனுப்ப கோருகிறேன்.

- **பெருமாள்சாமி, வண்டலூர், சென்னை**

# அறிவியலுக்கு வித்திட்டு உரமூட்டி வளர்த்த சில விஞ்ஞானிகள்

இஸ்லாம் அறிவையும், ஆராய்ச்சியையும் தூண்டுகின்றது. அது வெற்று ஆன்மீகம் பற்றி பேசவில்லை. மாறாக படைத்தவனையும் மறுமையையும் அறிய பகுத்தறிவு கொண்டு இயற்கையை ஆராயச் சொல்கிறது. இதுவே அறிவியல் எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்தது.

இஸ்லாத்தின் முதல் தூது, 'இக்ர:!" (ஓது!) என்ற கட்டளையுடன்தான் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் இறங்கிய 5 வசனங்களும் வாசித்தல், கற்றல், எழுதுதல் என்ற அம்சங்களை உள்ளடக்கியிருப்பது சிறப்பாக கவனிக்கப்பட வேண்டியதாகும்:

**● (யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திரு நாமத்தைக் கொண்டு ஓதுவீராக. "அலக்" என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான். (திருக்குர்ஆன் 96:1-5)**

அடுத்து குர்ஆனின் போதனைகள் இயற்கை விஞ்ஞானத்தை ஆராயத் தூண்டுகின்றது.

**● ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது? வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது? மலைகள் எவ்வாறு நட்டப்பட்டுள்ளன? பூமி எவ்வாறு விரிக்கப் பட்டுள்ளது? என்பதை அவர்கள் பார்க்க வேண்டாமா? (திருக்குர்ஆன் 88:17-20)**

**● நிச்சயமாக வானங்கள் மற்றும் பூமியைப் படைத்ததிலும், இரவு-பகல் மாறி மாறி வருவதிலும் சிந்தனையுடையோருக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (திருக்குர்ஆன் 3:190-191)**

**● உறுதியாக நம்பிக்கைகொள்வோருக்கு பூமியில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. உங்களுக்குள்ளேயும் இருக்கின்றன. நீங்கள் (சிந்தித்துப்) பார்க்க மாட்டீர்களா? (திருக்குர்ஆன் 51:20-21)**

இவ்வாறு ஏராளம் வசனங்களை இதற்கு ஆதாரமாகக் கூறலாம். அறிவியல் துறையின் ஆய்வுக்கான ஆக்கத்தினையும், ஊக்கத்தினையும் அல்குர்ஆனும், நபிமொழிகளுமே ஊட்டின. அந்த ஊக்கம் இன்றைய அறிவியலுக்கு அடிப்படைகளை வகுத்துத் தந்த அரபு விஞ்ஞானிகளை உருவாக்கியது.

## இருண்ட காலத்தில் ஐரோப்பா

ஐரோப்பா அன்று இருண்ட காலத்தில் வாழ்ந்தபோது அந்த அரபு மண்ணில் இருந்துதான் அறிவியலின் அடிப்படைகள் உருவாகி வளர்ந்தன. பிற்காலங்களில் சிலுவை யுத்தங்களுக்குப் பிறகு அவை ஐரோப்பியர்களால் கைப்பற்றப் பட்டு அவர்கள்தான் அறிவியலின் முன்னோடிகள் என்ற மாயை ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்த காலனி ஆதிக்க சக்திகளும் இந்த உண்மைகளை மறைத்து வைப்பதில் பெரும் பங்காற்றின. ஆயினும் சில மறைக்கப்படாத விடயங்கள் இன்றும் தலைகாட்டவே செய்கின்றன. உதாரணமாக அல்ஜிப்ரா, , அல்கெமியா, ஆல்கஹால், அல்கலி, அல்காரிதம் (Algebra, Al-Chemy (Chemistry). Alcohol,

Alkali, Algorithm) போன்ற அறிவியல் பதங்கள் அரபு முஸ்லிம்களிடம் இருந்துதான் அறிவியல் அடிப்படைகள் உருவாகின என்பதற்கு சாட்சி பகர்ந்து கொண்டு இருக்கின்றன.

இது குறித்து பேராசிரியர் Stanislas Guyand அவர்கள் தனது Encyceopadie des science religieususus என்ற ஜெர்மனிய நூலில்,

- 'மத்தியகால வரலாறுகளிலேயே இஸ்லாத்தின் வரலாறு நாகரிகத்தின் வரலாறாகவே விளங்குகிறது. புறக்கணிக்கப்பட்ட கிரேக்க விஞ்ஞானத்தையும் தத்துவ சாத்திரங்களையும் அழிவிலிருந்து பாதுகாத்து, மேற்குலகை எழுச்சிபெறச் செய்து அறிவியக்க வளர்ச்சிக்குக் காரணகர்த்தாக்களாக இருந்ததற்காக நாம் முஸ்லிம்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஏழாம் நூற்றாண்டில் பழைய உலகம் மரண வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தபோது அரேபியர்கள் பெற்ற வெற்றி இந்த உலகில் புதிய குருதியைப் பாய்ச்சியது.' என்று குறிப்பிடுவது மிகைப்படுத்தப்பட்டதொரு கூற்றல்ல.

இதே கருத்தை C.E. Storss என்ற அறிஞர் Many Greeds -One cross என்ற நூலில்,

- 'இருள் அடைந்திருந்த யுகத்தில் விஞ்ஞானம், தத்துவம் போன்ற ஒளிச்சுடர்களை உயரப்பிடித்திருந்த பெருமை அரேபிய முஸ்லிம்களையே சாரும். அவர்களே அரிஸ்டோட்டில், பிளேட்டோ, இயுக்லித் தொலமி ஆகியோரின் நூல்களை அறபு மொழியில்பெயர்த்து பாதுகாத்தனர். அவர்களாலேயே இந்நூல்களை மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பியரும் தத்தம் மொழிகளில் பெற்றுக்கொள்ள முடிந்தது' என்று குறிப்பிடுகின்றார்.

## அரபு முஸ்லிம் விஞ்ஞானிகள்

வியக்கத்தகு சாதனைகள் படைத்த அரபு முஸ்லிம் விஞ்ஞானிகள் சிலரின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

| எண் | பெயர் | காலம்(கி.பி) | துறை |
|---|---|---|---|
| 1 | அல்குவாரிஸ்மி (அல்காரிஸ்ம்) | 780-850 | கணிதம், வானவியல் |
| 2 | அல்ராஜி (ரேஜஸ்) | 844-946 | மருத்துவம் |
| 3 | அல்ஹைதம் (அல்ஹேஜன்) | 965-1039 | கணிதம், ஒளியியல் |
| 4 | அல்பிரூணி | 973-1048 | கணிதம், தத்துவம், வரலாறு |
| 5 | இப்னுசீனா (அவிசென்னா) | 980-1037 | மருத்துவம் |
| 6 | அல்இத்ரீஸி (டிரேஸஸ்) | 1100 | புவியியல் |
| 7 | இப்னுருஸ்து (அவிர்ரோஸ்) | 1126-1198 | மருத்துவம், தத்துவம் |
| 8 | ஜாபிர் இப்னு ஹையான்(ஜிபர்) | 803 | பௌதீகம் |
| 9 | அல்தபரி | 838 | மருத்துவம் |
| 10 | அல்பத்தானி (அல்பதக்னியஸ்) | 858 | தாவரவியல் |
| 11 | அல்மசூதி | 957 | புவியியல் |
| 12 | அல்ஸஹ்ராவி (அல்புகேஸிஸ்) | 936 | அறுவைசிகிச்சை |
| 13 | இப்னுஹல்தூன் | 1332 | வரலாறு |

| | | | |
|---|---|---|---|
| 14 | இப்னு ஹுஜ்ர் (அவன்ஜோர்) | | அறுவை சிகிச்சை |
| 15 | இப்னுஇஷாக் அல்கிந்தி | 800-873 | தத்துவம், பௌதீகம், ஒளியியல் |
| 16 | முஹம்மது சகரிய்யா யாஸீன் | | மருத்துவம் |
| 17 | அலி இப்னு அப்பான் | | மருத்துவம் |

(அலி இப்னு அப்பான் எனும் மருத்துவ மேதை அக்காலத்திலேயே 20 பாகங்களைக்கொண்ட ஒரு மருத்துவ நூலை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்).

# பசி அவர்களை வெளியேற்றியபோது...

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் வெளியே புறப்பட்டார்கள். அப்போது அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரும் வெளியே வந்த நேரத்தில் புறப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். "இந்த நேரத்தில் ஏன் வெளியே புறப்படுகிறீர்கள்?" என்று அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவ்விருவரும் "பசி" என்றனர். "என் உயிரை கைவசப்படுத்தியுள்ளவன் மீது ஆணையாக! நீங்கள் எதற்காகப் புறப்பட்டுள்ளீர்களோ அதற்காகவே நானும் புறப்பட்டுள்ளேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவ்விருவரையும் நோக்கி "நடங்கள்" என்றார்கள். அவர்களிருவரும் நபியவர்களுடன் நடந்தனர். மூவரும் அன்சார்களைச் சேர்ந்த ஒருவரின் இல்லத்தை அடைந்தனர். அப்போது அவர், வீட்டில் இல்லை. அவரது மனைவி அவர்களைக் கண்டதும் "நல்வரவு" என்று கூறினார். "அவர் எங்கே?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். "எங்களுக்காக சுவையான நீர் எடுத்து வரச் சென்றுள்ளார்" என்று அப்பெண்மணி கூறிக் கொண்டிருக்கும் போதே கணவர் வந்து சேர்ந்தார்.

நபி (ஸல்) அவர்களையும், அவர்களின் இரு தோழர்களையும் கண்டு, "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! இன்றைய தினம் சிறந்த விருந்தினர்களைப் பெற்றவர், என்னைவிட யாரும் இல்லை" என்று அவர் கூறினார். வெளியே சென்று செங்காய், கனிந்த பேரீச்சம் பழம் கொண்ட ஒரு குலையைக் கொண்டு வந்தார். இதைச் சாப்பிடுங்கள்! என்று கூறிவிட்டு (ஆட்டை அறுக்க) கத்தியை எடுத்தார். "பால் கறக்கும் ஆட்டைத் தவிர்த்துக் கொள்!" என நபி (ஸல்) அவரிடம் கூறினார்கள். அவர் ஆட்டை அறுத்தார்: அதையும் பழக்குலையையும் அவர்கள் உண்டார்கள்: பருகினார்கள்.

வயிறு நிரம்பி தாகம் தனிந்ததும், "அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த பாக்கியம் பற்றியும் மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். பசியோடு வந்தீர்கள்: வயிறு நிரம்பி திரும்பிச் செல்கிறீர்கள்" என்று அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரிடம் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம்

# வீடுவரை ரகு!

"ஹலோ ஓலா டாக்சிங்களா? ஸ்டேட் பான்ங் ஏடிஎம் முன்னாடி நிற்கிறேன். வெள்ளை ஜுப்பா, தொப்பி, கறுப்பு சூட்கேஸ்தான் எனது அடையாளம்." ...


தாமதியாமல் வந்து சேர்ந்தது ஓலா டாக்சி. ஏறி அமர்ந்தேன்.

ரயில்நிலையத்தில் இருந்து வீடுவரை டாக்சி புக் செய்திருந்தேன். அன்றைய முதல் ஓட்டமோ என்னவோ, டாக்சியில் இருந்த அவரது இஷ்ட தெய்வத்தைக் கும்பிட்டுவிட்டு டாக்சியைக் கிளப்பினார் ஓட்டுனர் ரகு. கூடவே எ∴ப் எம் ரேடியோவும் இசையை ஒலிக்கத் துவங்கியது.

"தம்பி, ரேடியாவைக் கொஞ்சம் குறைக்கிறீங்களா, நானும் எனது பிரார்த்தனையை செய்துக்கறேன்.."

"ரொம்ப சாரி பாய், தாராளமா செய்ங்க பாய்" .. கூறியவாறு ரேடியோவை அணைத்து வைத்தார் ரகு.

நானும் வாகனத்தில் பயணிக்கும்போது வழக்கமாக செய்யும் துஆவை மொழிந்தேன் "சுப்ஹானல்லதீ சஹ்ஹர லனா ஹாதா வமாகுன்னா லஹு முக்ரினீன். வ இன்னா இலா ரப்பினா ல முன்கலிபூன்." (இந்த வாகனத்தை நமக்கு வசப்படுத்தித் தந்த (இறைவன்) மிகத் தூயவன். இதற்கு முன் இதற்கு சக்தியற்றவர்களாக இருந்தோம். மேலும் அவனிடமே நமது மீளுதலும் உள்ளது.)



இலக்கை நோக்கி சென்று கொண்டிருந்தது டாக்சி நாற்பது நிமிட நேரம் பயணம். மெதுவாக ஓட்டுனரிடம் பேச்சு கொடுக்க ஆரம்பித்தேன்.

"என்ன தம்பி, இது உங்க சொந்த வண்டீங்களா?"

"ஆமா பாய், போன வருடம்தான் வாங்கினேன்"

"ரொம்ப சந்தோஷம், கடவுள் உங்களுக்கு அருள் செய்யட்டும்... உங்களுக்கும் கடவுள் மேலே ஆழமா நம்பிக்கை இருக்குன்னு நினைக்கிறேன்"

"கண்டிப்பா பாய், கடவுள் இல்லாட்டி நாமும் இல்லைதானே பாய்?"

" ரொம்ப சந்தோஷம் ரகு... ரகுதானே உங்க பேர் தம்பி?"

"ஆமா பாய் ரகுவரன், ரகுன்னே கூப்பிடுங்க"

"இன்னைக்கு பார் ரகு, மக்களுக்கு நிறைய பேருக்கு கடவுள் மேலே நம்பிக்கையே இல்ல, பக்தியுள்ளவங்கள பார்ப்பதே ரொம்ப அபூர்வமாயிருச்சு"

"ஆமா பாய், இன்னைக்கு கடவுள்னு சொன்னாலே ரொம்ப கேலியாப் பாக்கறாங்க இளைஞர்கள்"

"ஆமால்ல, கடவுள் பயம்கறது ஒன்னு இல்லாததால் நாட்டுலே

என்னெல்லாம் நடக்குது பாருங்க ரகு.. குடும்பத்துல அம்மாவும் அப்பாவும் ராத்திரி பகலா வேல செய்யறாங்க.. யாருக்கு வேண்டி? அவங்களோட பிள்ளைகளை நல்லா வளர்க்கணுங்கறதுக்காக... ஆனா என்ன நடக்குது பாருங்க.. பிள்ளைகள் கொஞ்சம் வளர்ந்து பெருசானதும் காதல் கீதல்னு யாரையாவது சேத்துகிட்டு பெற்றோரையே தூக்கி எறிஞ்சிட்டுப் போயிர்றாங்க.. சரி, ஒழுங்கா கல்யாணம் பண்ணி வச்சாக்கூட அந்தப் பெத்தவங்கள ஒரு பாரமாவே நினைக்கிறாங்க... நடக்குதா இல்லையா ரகு?"

"ஆமா பாய், ரொம்ப கரெக்டா சொன்னீங்க... அது மட்டுமா அவங்கள முதியோர் இல்லத்துல கொண்டுபோய் சேர்க்கவும் செய்யறாங்க.... இன்னும் சொத்துக்கு ஆசைப்பட்டு கருணைக் கொலைன்னு சொல்லி ஆளையே க்ளோஸ் பண்ணவும் செய்றாங்க பாய்"

"நான் சொன்னது ஒரு உதாரணம் மட்டும்தான் ரகு. இன்னும் பாருங்க, மக்களிடம் குடிப்பழக்கம், போதை மருந்து, விபச்சாரம், கள்ளக்காதல், இலஞ்சம், கொலை, கொள்ளை இதெல்லாம் நாளுக்கு நாள் அதிகரிச்சிட்டே போகுது."

"இப்படியே போனா இது எங்க போய் முடியும்னே தெரில பாய்"

"இப்பவே மக்கள் வாழ்க்கைய வெறுக்க ஆரம்பிச்சிருக்காங்க தெரியுமா ரகு. இந்தியால டெய்லி சுமார் 370 பேர் தற்கொலை பண்ணிக்கிறாங்கன்னு தெரியுமா ரகு?"

"அப்படியா பாய்?"

"ஆமா ரகு... இப்படி பாவங்கள் கட்டுக்கடங்காம பெருகுவதற்கு என்ன காரணம்னா, என்ன செஞ்சாலும் தட்டிக்கேட்க யாரும் இல்ல அப்படீங்கிற தைரியம் மக்களுக்கு ஜாஸ்தியாயிட்டே வருது"

"ஆமா பாய், நிலைமை ரொம்ப மோசமாயிட்டே வருது. கடவுள் பயமே சுத்தமா இல்லாம போயிருச்சுங்கறது உண்மைதான் பாய். நாங்கெல்லாம் சின்னதா இருந்தப்போ பள்ளிக்கூடத்திலே நீதி போதனைன்னு கடவுளப்பத்தியெல்லாம் சொல்லிக் குடுத்தாங்க. இப்ப அதெல்லாம் இல்ல. பணம் சம்பாதிக்கறதுக்கு என்ன வழியோ அதமட்டும் சொல்லிக்குடுத்துட்டு இருக்காங்க."

"ஆமா ரகு, டாக்டராக இன்ஜினியராக என்ன தேவையோ அதைமட்டும் பிள்ளைகளுக்குக் கத்துக் குடுக்கறாங்க, ஆனா மனுஷனாகறது எப்படின்னு கத்துக்குடுக்கறதே இல்ல... பெத்தவங்களுக்கும் அதைப்பத்தி கவலயே இல்ல. அவங்களும் பிள்ளைகள் இஞ்சினியராகி டாகடராகி கைநிறைய சம்பாதிச்சாப் போதும்னு கண்ணைமூடிக்கிட்டு ஆலாய்ப் பறக்கிறாங்க. கடைசீல யாருக்காக அத்தன பாடு பட்டாங்களோ அவங்களே இவங்கள தூக்கி எறியறாங்க..."

"பாய், ஆனா நீங்க சொல்ற மாதிரி கடவுள் பக்தி அப்படி சுத்தமா இல்லேன்னு சொல்லமுடியாதே... நிறையபேரு கடவுள வணங்கீட்டுதானே இருக்காகங்க. பின்னே எப்படி கடவுள் பயம் விட்டுப்போச்சுன்னு

சொல்றீங்க?"

"கடவுள் பயம்னா கடவுள் நம்ம பாத்துகிட்டு இருக்கான், கடவுள்கிட்டே நம்ம செயல்களுக்கு பதில் சொல்லியாகணும் அப்படீங்கற பொறுப்புணர்வு ரகு... அதுதான் இல்லாம போச்சுன்னு சொல்றேன்"

"அது எப்படி பாய்? அதுக்கு என்ன காரணம்?"

"கடவுள்னா யாருங்கறத சரியானபடி கத்துகுடுக்கணும் ரகு. கடவுள்னா இந்த உலகத்தையெல்லாம் படைச்சு பரிபாலிப்பவன்தானே ரகு... ஆனா என்ன நடக்கிறது பாருங்க... அந்த கடவுள் அல்லாதவற்றை எல்லாம் காட்டி கடவுள், கடவுள்னு சொல்லிக் கத்துக் குடுக்கறாங்க. அதனால என்னாகுது? மக்களுக்கு உண்மையான கடவுள் பற்றிய மரியாதை அல்லது சீரியஸ்னஸ் அப்படீங்கறதே இல்லாம போயிருது... ஏதாவது உருவத்தைக் காட்டி இதுதான் கடவுள் அப்படீன்னு குழந்தைகளுக்கு கத்துக் குடுக்கும்போது 'ஓ இவ்வளவுதானா கடவுள்!' அப்படீங்கற மனோபாவம் வந்துருது.."

"புரியுது பாய்... கடவுளைப் பத்தி ஒரு அலட்சிய மனோபாவம் வந்து விட்டாலே பாவம் செய்ய மக்கள் தயங்க மாட்டாங்க... உண்மைதான்..."

"சின்னச்சின்ன விஷயங்களக் காட்டி அதையெல்லாம் கடவுள்னு கற்பிப்பத விட்டுட்டு உலகத்தைப் படைத்தவன்தான் உண்மைக் கடவுள் அவன் நம்மையெல்லாம் கண்காணிச்சிட்டு வர்றான், மரணத்துக்குப் பிறகு அவன்கிட்ட விசாரணை இருக்குது, விசாரணைக்குப் பிறகு சொர்க்கம் நரகம் எல்லாம் இருக்குது அப்படீங்கற உண்மையெல்லாம் நம்ம குழந்தைகளுக்கு கத்துகுடுத்து பாருங்க அவங்களுக்கு பயஉணர்வு வந்துரும். நள்ளிரவு நேரத்தில தனிமைல இருக்கும்போது கூட மொபைல்ல ஆபாசங்கள அவங்க பார்க்கமாட்டாங்க... ஏன்னா கடவுள் நம்மப் பாத்துகிட்டு இருக்காங்கற உணர்வு அவங்கள தடுக்கும்."

"கரெக்ட் பாய், ஆனா இன்னைக்கு மக்கள் யாருமே அப்படி யோசிக்கிறதே இல்லையே. எங்களுக்கு எங்க அம்மா அப்பா எதை சொல்லிக் குடுத்தாங்களோ அதத்தான் வணங்கீட்டு வர்றோம். நீங்க கூட தர்கான்னு சொல்லி சமாதீலதானே போய் பூவெல்லாம் வெச்சு வணங்கறீங்க..."

"ஆமா ரகு, இந்த வழக்கத்தை விட்டுட்டு நாம எல்லோரும் படைத்தவன நேரடியா வணங்க ஆரம்பிக்கணும். அப்பதான் உண்மையான கடவுள் பயம் உண்டாகும். முன்னோர்கள் சொன்னாங்களேன்னு சொல்லி உண்மையான கடவுளை விட்டுட்டு எதை எதையோ வணங்கினா மக்களை திருத்தவே முடியாது. தனிநபர் வாழ்க்கைலேயும் சரி, குடும்ப வாழ்க்கைலேயும் சரி ஒழுக்கம் அப்படீங்கறதேயெ கொண்டுவர முடியாது. அப்படி படைத்தவனை வணங்கறதுக்கு நமக்கு எந்த ஒரு புரோக்கருடைய தேவையும் இல்லை. நேரடியாவே வணங்கலாம். எந்த செலவும் இல்லாம வழிபாடு செய்யலாம். நமக்கு வேண்டியதை நேரடியாகவே நம்மைப் படத்தவன்கிட்ட கேட்டு பிரார்த்திக்கலாம். இப்படி அவன வணங்கும் முறையைத்தான் கடவுளே நமக்கு கற்றுக் குடுத்தான்."

# உணவு என்ற பொதுச் சொத்து

உணவு என்பது இவ்வுலகுக்கு இறைவனின் அருட்கொடை. அது ஒரு பொதுச்சொத்து. அதை வீணடித்தல் என்னென்ன விளைவுகள் உண்டாக்குமோ இல்லையோ ஒன்று மட்டும் உறுதி. அது இறைவனிடம் குற்றமாக- பாவமாக- பதிவு செய்யப்படுகிறது.



யதார்த்தமாக மிஞ்சுவது என்பது வேறு வேண்டுமென்றே வெரைட்டிகளை அதிகப்படுத்தி உண்ண முடிமாமல் குப்பையில் கொட்டுவது என்பது வேறு. இதில் இரண்டாவது நிலையே இன்று வசதி படைத்தவர்களின் வீடுகளில் நாடுகளில் அதிகபட்சம் நடந்து வருகிறது.

இவர்களைப்பற்றி தன் திருமறையில் இறைவனின் எச்சரிக்கை யாதெனில்...

- **இறைவனையும், இறுதி நாளையும் நம்பாது மக்கள் மெச்சுவதற்காக தமது செல்வத்தை செலவிடுவோர் (ஷைத்தானின் நண்பர்கள் ஆவர்). யாருக்கு ஷைத்தான் நண்பனாக ஆகி விட்டானோ அவனே கெட்ட நண்பன் (அல்குர்ஆன் 4:36)**
- **உண்ணுங்கள், பருகுங்கள் வீண்விரயம் செய்யாதீர்கள். வீண்விரயம் செய்பவர்களை இறைவன் நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 7:31)**
- முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மறுமை நாளில், நான்கு கேள்விகளுக்கு பதில் சொல்லாத வரையில் எவரும் ஒரு அடிகூட முன்னால் எடுத்து வைக்க முடியாது. அவற்றில் ஒன்றுதான் சம்பாதித்த பணத்தை எவ்வாறு செலவு செய்தாய்?" என்பது. (திர்மிதி)
- **நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ தன் இரட்சகனுக்கு நன்றி செலுத்தாது மாறு செய்தவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 17:27)**

## சிந்திய பருக்கைகளையும் உண்ண வேண்டும்

மனிதர்கள் எந்த அளவுக்கு எளிமையாக இருக்க வேண்டுமென்றால்... சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது கையிலிருந்து தவறி கீழே விழும் சிறு துண்டு உணவைக்கூட எடுத்து துடைத்து விட்டு சாப்பிடச்சொல்கிறது இஸ்லாம். இதுபற்றி இறைத்தூதர் நபி(ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது...



- "உங்களில் ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ஒரு துண்டு உணவுப் பொருள் கீழே விழுந்து விட்டால் அதில் அசுத்தம் ஏதும் பட்டிருந்தால் அதை நீக்கி விட்டு சாப்பிடட்டும் அதை ஷைத்தானுக்கு விட்டு விட வேண்டாம்" என்று நபி (ஸல்)

அவர்கள் அறிவுறுத்தினார்கள். (அறிவிப்பவர்: அனஸ்(ரலி) நூல்கள்: முஸ்லிம், அஹமத், அபூதாவூத்)



● வறுமையைப் பற்றி பேசிக் கொண்டும், அதுபற்றி அச்சம் தெரிவித்துக் கொண்டும் நாங்கள் இருந்த போது, நபி (ஸல்) அவர்கள் எங்களை நோக்கி வந்து “வறுமையை (நினைத்தா) அஞ்சு கிறீர்கள்? எனது உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது ஆணையாக (வருங்காலத்தில்) இந்த உலக(த்துச் செல்வ)ம் ஒரேயடியாக உங்கள் மீது பொழியப்படும்! உங்களின் உள்ளத்தை (நல்வழியை விட்டும்) ஒரேயடியாக திசை திருப்பிவிடக் கூடியதாகத்தான் அந்தச் செல்வம் அமையும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபுதர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்:இப்னுமாஜா)



● “ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு சோதனையுண்டு. என்னுடைய சமுதாயத்திற்கு செல்வம் சோதனையாகும்“ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: கஅப் பின் இயாஸ் (ரலி) (நூல்: திர்மிதீ)

மிகமிக உறுதியான தொனியில் வீண் விரையத்தை இறைவன் கண்டிப்பதைப் பாருங்கள்:

● **நிச்சயமாக நீங்கள் நரகத்தைப் பார்ப்பீர்கள். பின்னும், நீங்கள் அதை உறுதியாகக் கண்ணால் பார்ப்பீர்கள். பின்னர் அந்நாளில் (இம்மையில் உங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த) அருட் கொடைகளைப் பற்றி நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்.(அல்குர்ஆன 102:6-8)**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................

# பகைவனிடமும் நீதி தவறக்கூடாது

● இறைநம்பிக்கையாளர்களே...! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்பவராகவும் இறைவனுக்கு சான்று வழங்குபவராகவும் திகழுங்கள். நீங்கள் செலுத்தும் நீதியும் வழங்கும் சாட்சியும் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே. (அல்குர்ஆன் 4:135)

● இறைநம்பிக்கையாளர்களே...! எந்தவொரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்து விடக்கூடாது. நீதியோடு நடங்கள். இதுவே இறையச்சத்துக்கு மிகநெருக்கமானது. இறைவனை அஞ்சி செயல் புரியுங்கள். நீங்கள் செய்பவற்றை முழுமையாக இறைவன் அறிந்தவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 5 : 08)

